செப்பநிட தானசுப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அட] யாழ்ப்பாணம்: விரோதிகிருது ஞு மார்கழி மீ உ வெள்ளிக்கிழமை (7-1-1972 [இல-உக

## பன்னிரண்டாந் திருமுறை

### பெண் குலத்திற்குப் பெருமை தந்த காரைக்காலம்மையார்

[செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. இ. நடராஜன் B. O. L., Dip. in Ed கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் திருமுறை மகாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரை]

(முன் வளர்ச்சி — 5)

விநாயகர், முருகன் ஆகியோரைப் பற்றிய பிரபந்தகளோடு அடியார்களைப் பற்றிய பிரபந்தங்களும் இத்திருமுறையில் வந்திருப்பது அவதானிக்கத்தக்கது. பின்னர் பன்னிரண்டாந் திருமுறையில் சேக்கிழார் பெருமான் அடியார்கள் பெருமையை எடுத்துக் கூறுவதற்கு இத்திருமுறை வழிகோலியதுபோல் அமைந் திருத்தலை யாம் அறிந்து மகிழலாம். இத்திருமுறையில் திருப்பாசுரம் தொடக்கம் 41 பிரபந்தங்களும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் பயப்பனவெயினும், காரைக்காலம்மையாரது பாடல்களை யாம் இங்கு நினைவுகூர விரும்புகின்றேம். காரைக்காலம்மையார் பெண்பாற் புலவர். பழவடியார்களுள் ஒருவர், எமக்கு ஓர் அப்பர் இருப்பதுபோல் ஓர் அம்மையும் உளர். என்பதை நினைந்து நாம் இறும்பூதடையலாம். அவ்வாறு அமைந்த நல்லிசைப்புலமை மெல்லியலார் அவர். இறைவனே "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே!' என்று உமையம்மையாருக்குச் சொன்னுரென்றால், இறைவனே அவருக்கு அம்மை என்னும் பெயரைச் சூட்டினுர் என்று பெறப்படுகின்றது. இதிலிருந்து அம்மையாரின் அருமைப் பாட்டை யாம் உணர்ந்துகொள்ளலாம். சங்க இலக்கியங்களிலே பெண்பாற் புலவர் பாடிய பாடல்கள் பலவற்றைக் காண்கின்றேம். திருமுறை இலக்கியத்திலே ஈடும் எடுப்புமற்ற பெண்பாற் புலவராக இவர் ஒருவரே திகழ்கின்றார் என்னின், பெண் குலத்துக்குத் தனிப்பெருஞ் சிறப்புத் தந்தவர் இவரேயாம். இவர்தம் வரலாறு மிக இனியது. அதனைச் சேக்கிழாரிடங் கேட்கவேண்டும். வைஷ்ணவத்துக்கு ஓர் ஆண்டாளம்மை யிருப்பாராயின், சைவத்துக்குக் காரைக்காலம்மையார் இருக்கின்றார். பெண் மணிகள் பெருந்திரளாகக் கூடியுள்ள இம்மாநாட்டில் இதனை நினைவு கூருதல் பொருத்தமுடையது எனக் கருதியிதனைச் சொல்கின்றேன். அற்புதத் திருவந்தாதியில் அவர் பாடும் பாட்டைப் பாருங்கள்.

'ஒன்றே நினைந்திருந்தேன்; ஒன்றே துணிந் தொழிந்தேன்;
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன் — ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற்கு ஆளாம் அது'

நினைத்தல், துணிதல், நெஞ்சத்து அடைத்தல் என்னும் மூன்று நிலைகளிலும் நினைத்தது ஒன்று, துணிந்தது வேறொன்று, உள்ளத்து அடைத்தது பிறிதொன்றோ? என்று மயங்கவைக்காமல், ஒன்றே நினைத்திருந்தேன், ஒன்றே துணிந்து மற்றவற்றை நீக்கினேன், ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைத்தேன்' என்று அவர் ஏகாரங் கொடுத்துச் சொல்லும் வீறுமிக்க சிறப்பைக் காண்கின்றேம். இவ்வாறே அம்மையாரின் அரும் பாடல்களையும், பதினொராந் திருமுறையின் பெருமைகளையும் விரிப்பிற் பெருகும்.

**பன்னிரண்டாந் திருமுறை**

'பன்னிரண்டாந் திருமுறை' என்னும் பொருள் இம் மகாநாட்டிற் பேசுமாறு எனக்குப் பணித்துள்ளீர்கள். அதுகாலை இத்திருமுறை பற்றிச் சிறிது விரிவாகச் சிந்திப்பதற்கு ஒரு வாய்ப்புண்டு. ஆதலால் இங்குச் சில குறிப்புகளை மட்டுமே சொல்லியமைகின்றேன். பன்னிரண்டாந் திருமுறை பெரிய புராணம் ஆகும். பெரியர் புராணமே 'பெரிய புராணம் என்று ஆயிற்று என்பர். பெரியர் யார்? "செயற்கரிய செய்வர் பெரியர்; சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்கின்றார் வள்ளுவர். செயற்கரிய செயல்களைச் செய்த பெரியாரது வரலாறு பெரிய புராணமாகும். ஆகவே, அது ஒரு வரலாற்று நூலாகின்றது. புராணம் என்ற சொலலின் கருத்து பழைய வரலாறு என்பதேயாகும். சிவபுராணம் பாடிய மணிவாசகப் பெருமான் இச்சொல்லை அப்பொருளிலேயே அமைத்திருத்தலைக் காண்கின்றேம். அன்றியும் இது ஒரு காவிய வடிவில் அமைந்துள்ளது. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆதியன மட்டுமே காப்பியங்கள் என்று யாம் கருதிவிடக்கூடாது. இதை ஒருவரலாற்று நூல் என்றேன். இது வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய பெரியாருடைய வரலாற்று நூலாம். பசியால் வருந்தி வெயிலால் உலர்ந்து கொடுவெயிலில் சுடுமணலில் வெகுதூரம் வழி நடந்து வாடி வதங்கிவரும் ஒருவனைப் பார்த்து அருளுடையான் ஒருவன் இன்முகங் காட்டி இனிய கூறி நல்ல கனிகளை — சுவைமிக்க கனிகளை — பல்வகைக் கனிகளைத் தோல்போக்கி விதை நீக்கி ஒரு பொற்றட்டில் ஏந்தி, மகனே! உனக்கு எது வேண்டுமோ, அதை எடுத்து உண்க என்று அவன் முன் வைத்தால எங்ஙனமோ, அங்ஙனேதான் சேக்கிழார் பெருமானுகிய கருணை மிக்க புலவர் பிறவிப் பெருவெயிலிற் கிடந்து துடித்து உய்தி நெறியை அடையவேண்டுமென்று அருட்டாகமும் பசியுங் கொண்டு வரும் மக்களுக்கு முன்னே மக்காள்! உங்களுக்கு எது விருப்பமோ அதனைக்

(வளர்ச்சி 4ஆம் பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்

வாயானை மனத்தானை
மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து
முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை
ஏற்றான் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத்
தொடர்ந்து நின்றேன்
தாயானைத் தவமாய
தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்
கென்றும்
சேயானைத் தென்கூடல்
திருஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப்
பெற்றேன் நானே.

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசுசுவாமிகள்.

**விடத்தல்தீவு**
**கற்பகப் பிள்ளையார் கோவில்**
**மகா கும்பாபிஷேகம்**

21-1-72 வெள்ளிக்கிழமை காலை 8 மணி 11 நிமிடம்தொடக்கம் 9 மணி 11 நிமிடம்வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மேற்படி கோவில மகா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். சித்தன்கேணி சிவஸ்ரீ வை. முத்துக் குமாரசுவாமிக் குருக்கள் பிரதிஷ்டா குருவாகவும் கடமைபுரிவார். சிவஸ்ரீ கு. மங்களேஸ்வரசர்மா, சிவஸ்ரீ சி, ஜோதீந்திர சர்மா, சிவஸ்ரீ க. குருமூர்த்திக் குருக்கள ஆகிய மூவரும் உதவி புரிவார்கள். ——

சைவ நற்சிந்தனை – 3.

## முருகப்பெருமான் அருள்வேண்டல்

— திரு. ச அம்பிகைபாகன் அவர்கள் —

(20-10-71-இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பெற்றது.)

முருகப் பெருமானைக் குறித்து அநுட்டிக்கப்படும் விரதங்களில் கந்தசட்டி விரதம் மிக முக்கியமானதாகும். அவ் விரத ஆறுநாட்களிலும் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயங்களில் விசேஷ பூசைகளும் புராணபடனம் முதலியனவும் நடைபெறும். முருகனடியார்கள் தங்கள் தங்களாலியன்ற முறையில் இவ் விரதத்தை அநுட்டிப்பார்கள். சிலர் ஆறு நாட்களும் உபவாசமிருப்பர், அப்படியிருக்க முடியாதவர்கள் கடைசி நாள் உபவாசமிருப்பர்.

சிவபெருமானுடைய திருக்குமாரரான முருகப் பெருமானை "என்றும் இளையாய் அழகியாய்', என அடியார் போற்றுவர் அவரின் பராக்கிரமங்களை விதந்து ஓதுவர். அவ்வளவு பராக்கிரமசாலி தமது இன்னல்களை எளிதில் போக்கிவிடுவார் என்பது அடியார் நம்பிக்கை. ஒரு அடியார் கிரவுஞ்ச மலையைப் பிளக்க எடுத்த வேலைத் தமது துன்பமாகிற மலையைப் பொடிபடுத்த எடுக்க வேண்டுமென்று கேட்கிறார்.

'இன்னம் ஒருகால் எனது
இடும்பைக் குன்றுக்கும்
கொல்நவில் வேல்சூர்
தடிந்தகொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம்
பட்டுருவத்தொட்ட
தனிவேலை வாங்கத்தகும்''

நக்கீரர் அருணகிரிநாதர் முதலிய அடியவர்களுக்கு அவரவர் விரும்பியவாறு தோன்றி முருகப்பெருமான் அருள் செய்துள்ளார். முருகப் பெருமானின் சிறந்த அடியார்களுள் ஒருவரான குமரகுருபர சுவாமிகள் தாம் அருளிய கந்தர் கலிவெண்பாவின் கடைசிப் பகுதியைப் அடியார் வேண்டுகோளாக அமைத்துள்ளார்கள். அப்பகுதியில் அடியார்கள் முருகப்பெருமானை,

பச்சைமயில் வாகனமும்
பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்
வேலும் — கச்சைத்
திரு அரையும் சீறடியும்
செங்கையும் ஈராறு
அருள் விழியும் மாமுகங்கள்
ஆறும் விரிகிரணம்
சிந்தப் புனைந்த திரு
முடிகள் ஓர் ஆறும்
எந்தத் திசையும்
எதிர்தோன்ற — வந்து' "

இன்னல்களைப் போக்க வேண்டுமென்கிறார்கள் இத் தோற்றத்தை இப்புண்ணிய தினத்தில் சிந்திப்பது பெரும் பேறாகும்.

எந்தவிதமான இன்னலும் எந்த இடத்தில் தோன்றினாலும் அந்தவிடத்தில் முருகப் பெருமான் தோன்றி அவற்றைப் பொடியாக்க வேண்டுமென்று அடியார்கள் வேண்டுகிறார்கள்.

"பல்கோடி சன்மப் பகையும்
அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும்
பல்பிணியும் பல்கோடி
பந்தமும் செய்வினையும்
பாம்பும் பிசாசும் அடல்
பூதமும் தீ நீரும்
பொருபடையும் — தீதகலா
வெவ்விடமும் துட்டமிருகம்
முதலாம் எவையும்
எவ்விடம் வந்து எம்மை
எதிர்ந்தாலும் அவ்விடத்தில்''

தோன்றி அருளவேண்டும் என்கிறார்கள்.

அடியார்கள் மகா வைத்தியநாதரான முருகப்பெருமானைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அவருக்கு முன் எவ்வின்னல் தான் நிற்க முடியும்? 'சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்' என்று பாரதியாரும்

வளர்ச்சி 4-ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருதுவூ மார்கழி மீ உங-உ வெள்ளிக்கிழமை [1972]

# சாத்திரப்பொருள் விளக்கம்

காஞ்சிபுரம் தொண்டைமண்டலம் ஸ்ரீ மெய்கண்டார் சந்தானம் ஞான பீடத்துக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் சென்ற திருவெம்பாவைக் காலத்தில் திருவாசகமட பரிபாலன சபையாதரவில் திருக்கேதீசுவரத்தில் நடைபெற்ற திருவாசக விழாவுக்குத் தலைமை வகிக்க அழைக்கப்பெற்றனர். இப்பொழுது யாழ்ப்பாணத்தில் சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவந்துள்ளனர். 4, 5-1-1972ஆகிய இரு தினங்களில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் "திருவருட்பயன்"என்னும் பொருள்பற்றிச் சிறப்பான சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். 1970ம் ஆண்டில் இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் சிவஞானசித்தியார் வகுப்பொன்றினை நடத்தியபொழுது பல புலவர் பெருமக்கள் பங்குபற்றினர்.

சுவாமிகள் பண்பட்ட தமிழ்ப் புலமை பெற்றுள்ளவர். இலக்கண ஆராய்ச்சியிலும் தர்க்க சாத்திரத்திலும் வல்லவர். துறவுபூணமுன் தருமபுரவாதீனத்தின் தமிழ்க் கல்லூரியினது அதிபராகக் கடமையாற்றியவர், சமய ஞானத்திலும் திறமைபெற்றவர். சைவாகமமுறைப்படி தீக்ஷைப் பேறுகள் பெற்று துறவு பூண்டு ஒரு மகிமையுள்ள ஆதீனத்தினது சந்நிதானமாக விளங்குகின்றனர்.

சுவாமிகள் புரிகின்ற சைவசாத்திர விரிவுரைகளில் ஒரு தனிச் சிறப்பைக் காணமுடிகின்றது. திருவைந்தெழுத்தையே சாதனமாகக் கொண்டு யாவரும் எளிதில் தெளியக்கூடிய முறையில் சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவார். ஈகாராதி பஞ்சாட்சரத்தில் எழுத்துக்கள் முறையே பொருள், அருள், தெருள், மருள், இருள் என்பவற்றைக் குறிக்கும். யகரத்தைக் குறிக்கும் ஆன்மா மருள் இருளாகிய நகர மகரங்களில் தொடர்பை நீக்கி வகரமாகிய அருளுடன்கூடி சிகரமாகிய பொருளைச் சேர்வதே பிறவிப் பயன் என்று முறையாக விளக்கஞ் செய்தார்கள். சாத்திரத்தில் காணப்படும் உண்மைகளை விளக்க பொருத்தமான திருமுறைச் செய்யுட்களை இசையுடன் பொருள் விளங்க ஓதுவார்கள்.

சைவசித்தாந்த நூல்களை குருவருளின்றிப் படித்துப் பயனடைய முடியாது அதற்காகத்தான் சமய விசேட நிருவாண தீக்ஷைப்பேறு உடையவர்கள் அவற்றைப்படிக்கவேண்டுமென மரபுஉள்ளது. திருவருளைத் துணைகொண்டு தான் சிவனடியை அடைய முடியும் திருவருளைப் பெற்ற குருவே ஒருவனுக்கு திருவருளினைச்சார வழிவகுப்பார். குருவின் மூலமாக சித்தாந்த உண்மைகளைக் கற்று சிந்தித்து நிட்டை கூடும் பயிற்சியை நல்குவதற்குச் சுவாமிகளுடைய சாத்திர விளக்கம் உறுதுணை புரியும்.

# பக்தியும் நீதியும் பொதிந்த நூல்கள்

[1859-ம் ஆண்டில் க. சப்பிரமணிய உபாத்தியாயரால் எழுதப்பட்ட ஏட்டிலிருந்து பெறப்பட்ட நூல்களைப்பற்றி திருகோணமலை திரு. மா. பீதாம்பரம் அவர்கள் எழுதிய வரலாறு:]

யான் திருக்குறள்படிக்கும் காலத்தில் பலவுரைகளும் படிக்க நேர்ந்தது. அவற்றுள் ஒன்று "திருக்குறள் மூலமும் மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான் மு. ரா. அருணாசலக் கவிராயர் எழுதிய தெளிபொருள் வசனமும்" (1930) என்பது.

அதில் 'நிறைமொழி மாந்தர்" என்னும் குறட்பாவிற்கு எழுதப்பட்ட உரையில்,

'நிறைந்த சொல் சோர்வுபடாத சொல். அஃதாவது குணத்தாலாவது கோபத்தாலாவது கூறிய சொற்கள் தவறாது பலித்துவிடுதலாம்.

இதுபற்றியே, 'சொற்சோர்வுபடேல்' என்றார் ஔவையாரும். (கொன்றைவேந்தன்) இதை இக்காலத்தவர் ஆத்திசூடி என்று அச்சிட்டிருக்கின்றனர்" என்று எழுதப்பட்டிருக்கின்றது இப்பகுதி - ஆத்திசூடியின் பழைய பெயர் 'கொன்றைவேந்தன்' எனக்கு மயக்கத்தைத்தந்து கொண்டிருந்தது. இற்றைக்குச் சிலநாட்களுக்கு முன், எனக்குக் கிடைத்த ஏட்டுப் பிரதி ஒன்றினைப் படித்தேன் அவ்வேடு ஆறுகூ ஆடி திகதி க. சுப்பிரமணிய உபாத்தியாயரால் எழுதப்பட்டது. 1859ஆம் ஆண்டு எழுதப்பட்ட இவ்வேடு மிகவும் தெளிவாக வுள்ளது இதில், 1 கொன்றைவேந்தன், 2. அன்னையும் பிதாவும், 3. ஈசுரன்மாலை, 4 வெற்றிவேற்கை, 5. மூதுரை 7. நீதிவெண்பா என்னும் நூல்கள் உண்டு.

1 கொன்றைவேந்தன்

'கொன்றைவேந்தன்' எனப்பெயரிய முதலாவது நூல், 'உ கணபதி முன்னிற்க சரஸ்வதி துணை கொன்றைவேந்தன் என்னும் முன்னுரையுடையது இதன் கடவுள் வாழ்த்து,

'கொன்றை வேந்தன்
செல்வ னடியிணை
என்றுமேத்தித்
தொழுவோம் யாமே'

என்றுள்ளது இதனையடுத்து வருவன.

'அறஞ்செய விரும்பு,
ஆறுவதுசினம.......'

என்பன,

இரண்டாவது நூலாகிய "அன்னையும் பிதாவும்" என்பதன் கடவுள் வாழ்த்து,

"ஆறே சூடி நீறே பூசி
ஏறேறு மீசனைக்
கூறாய் நெஞ்சே"

என்பது இதனை அடுத்து வருவன.

"அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்,
ஆலயம் தொழுவது ..."

முதலியன, இதன் பெயர் 'ஆத்திசூடி' என்று தரப்படவில்லை.

மூன்றாவது நூல் "ஈசுரன்மாலை" இதன கடவுள் வாழ்த்து.

'விரும்பித் தொழுவார்,
வினைதீர்த்த முக்கட்
கரும்பிற் பிறந்த களிறு"

என்பது, நூல்:

1. அரும்பிய கொன்றை
யணிந்த சென்னியன்
2. ஆறும் பிறையுஞ்
சூடிய கடவுள்
3. ... ... ... முதலியன,

'ஈசுரன்மாலை' சிலர் சொல்லக்கேள்வி. அச்சுப் புத்தகமாக யான் கண்டிலேன.

இது விஷயமான குறிப்புக்களை அறிஞர்கள் இப்பத்திரிகைமூலம் வெளியிடுயிடுதல் நலமாகும்.

# ஸேர். இராமநாதன் வாழ்க்கை வரலாறு

சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும், சிறந்த தேச பக்தனுமாகிய திரு எம். வைத்திலிங்கம் அவர்கள், சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய "வாழ்க்கை வரலாறு" என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர். இந்நூல் சில தினங்களுக்கு முன் கொழும்பில் வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் அந் நூலைச் சிறந்த முறையில் வெளியிடும் விழாவொன்று வருகின்ற பொங்கலின்று யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும். க. வி.

# திருக்குறள் THE GREAT KURAL

## பாயிரவியல் Introduction

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச. சூரசங்காரன் LLB (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் உரைக்கோத்து' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. —ஆசிரியர்]

அதிகாரம் I கடவுள் வாழ்த்து

குறள் (3) (முற்றுெடர்— 3)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

1. உயிர்களது உள்ளக் கமலத்தில் இருக்கும் பகவானுடைய பெருமை பொருந்திய திருவடிகளைச் சரண் அடைந்தவர்கள் உலகத்தில் நிலைபெற்று வாழ்வார்கள்.

The heart of living beings is the lotus flower in which god has his abode. Those who take refuge in His glorious Feet shall long prosper in this world.

2. அன்பரது மனமாகிய தாமரைமலர் மீது சென்று பொருந்தி இருக்கும் கடவுளுடைய பெருமை பொருந்திய திருவடிகளைச் சேர்ந்தவர்கள் எல்லா உலகிற்கும் மேலான வீட்டுலகில் எக்காலத்தும் வாழ்வார்கள்.

They live eternally in heaven who take refuge in the glorious Feet of God, Who has his abode in the lotus of the heart of his devotees

சேர்ந்தார் — இடைவிடாது நினைப்பவர். மலர் என்பதற்குக் குருநாதரின் நெஞ்சத் தாமரை என்னும் பொருள் கொள்ளலாம். நிலம் என்பது இம்மை மறுமை இரண்டினையும் குறிப்பதாகவும் கொள்ளலாம். மலர் என்பதனை உள்ளத்தின் உருவமாகக் கொண்டு மலர்மிசை ஏகினான் என்பதற்கு உயர்ந்த அறிவினை உடையவன் எனப் பொருள் கொள்வாரும் உண்டு. அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேர்தலின் ஏகினான் என இறந்த காலத்தாற் கூறினார் என்று விளக்கும் பரிமேழலகர் உரையைத் தழுவியது பின்னைய உரை. (வளரும்)

# சைவர்கட்கு உணவு தாவர உணவே

காலஞ்சென்ற திரு. க. சோமசுந்தரம் B. A,
கல்வளை, சண்டிலிப்பாய். (உபதலைவர் அகில இலங்கை சைவ சித்தாந்த சபை, முன்னாள் உப அதிபர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

பஞ்சமா பாதகங்களை முற்றாய் விலக்கி அன்பையும் ஜீவகாருண்யத்தையும் அடிப்படை ஆந்திபாரமாகக் கொண்டது சைவசமயம். இப்படிப்பட்ட சமயத்தில் உரிமை பூண்டு பிறந்த — இனிப் பிறக்கின்ற மானிடர்கள் மிகவும் பாக்கியசாலிகள். புண்ணிய ஆன்மாக்கள் எந்தச் சமயமாயிருந்தாலும், யாரால் உண்டாக்கப்பெற்றதாயிருப்பினும்; அன்பையும் ஜீவகாருண்யத்தையும் அடிப்படையாய்க் கொள்ளாத சமயம் சமயமல்ல. அந்தச் சமயத்தை தழுவுவோர் வீடுபேற்றை அடைவது சுலபமல்ல நாம் உலகில் செய்கின்ற எந்தச் செயலையும் மனதாலும், வாக்காலும், காயத்தாலும் செய்கின்றோம். செய்யும்பொழுது எங்கள் மனச்சாட்சிக்கு நல்லாய்த் தெரிகின்றது. செயலின் சரி, பிழை, "அகிம்சா, பரமோ தர்மம்" என்ற தர்மந்தான் உலகில் எல்லாத் தர்மங்கட்கும் மேலான தர்மம். அதன் கருத்து யாதொரு பிராணிக்கும் தீங்கு செய்யாது — வருத்தாதிருத்தல், எக்காரணம் பற்றியும், சுயநலங்கருதியும் மற்றைப் பிராணிக்குத் தீங்குசெய்யக் கூடாது. ஜீவன்கள் எல்லாம் உணர்ச்சியுள்ளவர்கள். உடற்கூற்றை உற்றுணர்ந்தால் எந்தப் பிராணியின் உயிரும் அதனுடலில் நீக்கமில்லாது செறிந்து நிற்கின்றது. ஆனதால்தான் ஒரு சிறு குண்டூசியால் ஏற்படும் வேதனை தானும் அந்த ஆன்மாவால் சகிக்கமுடியாது. இதிங்ஙனமிருப்ப மானிட ஜென்மம் எடுத்த நாம் எங்கள் உடலைப் பருக்கச்செய்வதற்கு மற்றும் உயிரை வருத்திச் சாப்பிடலாமா? இது தர்மமா? இது நீதியா? நாங்கள் அன்புடையவர்களா? ஜீவகாருண்ய முள்ளவர்களா? திருவள்ளுவர் சொல்லியபடி "தன்னூன் பெருக்கற்கு தான் பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்", மானிட உடலை வளர்க்க உணவு அவசியம். ஆனல் மானிடரை இருபிரிவாய் ஞானிகள் பிரித்திருக்கின்றார்கள். முதலாவது கண்மூடி மௌனியாயிருந்து தவம்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

# 'அமைதி' வேண்டுமா ?

சைவ சமய நெறியைக் கடைப் பிடித்தால்

நன்னெறியுண்டாகும்;

காட்சி தந்தவர் :

காஞ்சிபுரம், தொண்டைமண்டலாதீன குருமகாசந்நிதானம்

## சீலஸ்ரீ. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

இடம்: வண்ணை. நாவலர் ஆச்சிரமம். 6-1-72 பிற்பகல் 3 மணி

காட்சி கண்டவர் : கா. இரகுநாதன்,

செயலாளர், யாழ். சைவசமயஅபிவிருத்திக்கழகம், நாயன்மார்கட்டு.

[சைவ பரிபாலன சபையின் சார்பில், நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காஞ்சிபுரம் தொண்டைமண்டலம் ஸ்ரீமெய்கண்டார் ஞானபீடத்துக் குருமகா சந்நிதானம் அவர்கள் 'திருவருட்பயன்' என்னும் சித்தாந்த சாத்திரப்பொருள் விளக்கம் மூன்று தினங்களுக்கு அருள்வார்கள் என்ற விளம்பரம் கிடைத்தது. இந்த அரிய வாய்ப்பை தகுந்தபடி பயனுறச்செய்யவேண்டும் என்னும் விருப்பத்துடன் குறித்தநேரம சமுகங் கொடுத்தேன் ஆங்கு பெருங்கூட்டம்! குருமகாசந்நிதானம் முதலாம்நாள் அருளுரை வழங்க எழுந்தருளியபோது சபையின் சார்பாக, தலைவரவர்கள் மாலைசூட்டி வரவேற்றார்கள். சபையிலே எத்திசைநோக்கினும் அறிஞர்கூட்டமும் அருளாளர்கள் கூட்டமுமாகவேயிருந்தது. கல்லூரி அதிபர்கள், குருவகுப்பினைச்சேர்ந்தோர், ஆசிரியர்கள், உயர்வகுப்பு மாணவ மாணவியர் இப்படி பலதிறத்தினர். சித்திரப் பாவைகள் போல ஆடாமல் அசையாமலிருந்து அருள்விருந்தைப் பருகினர். 'நல்லாரைக் காண்பதுவும், அவர் சொற் கேட்பதுவும், அவர் குணங்களுரைப்பதுவும், அவரோடிணங்கியிருப்பதுவும் நன்றேன்பதற்கேற்ப, அவரை நாடிச் சில சந்தேகங்களைத் தெளிவுபெற விரும்பி, காத்து நின்றேன். அன்பர்கள் கூட்டம் அடிக்கடி வந்து கொண்டிருந்தமையினால் அவருக்கு ஆறுதல் கிடைக்க முடியாமலிருந்தது கண்டு வருந்தினேன். சற்று ஒதுங்கி நின்றேன்; சிறிது நேரத்தில் அவர் அருட் பார்வை என் பக்கம் திரும்பியது. என்னைச் சுவாமிகள் அழைத்தார்கள்! அணுகினேன் — வெந்துயர் தீர்க்கும் வெண்ணீற்றைத் தந்தார்கள்! அந்தப் பொன்மேனி யெம்மானை வணங்கி, சில வினாக்களுக்கு விளக்கம் வேண்டும் என்ற விண்ணப்பஞ் செய்தேன்! ஒருபார்வை என்னை நிமிர்ந்து பார்க்கலானார். எனக்கு சிறிது பயமாக இருந்தது. 'சரி கேளும்' என்றார்கள். கேட்க நினைத்திருந்த சில கேள்விகளை விட்டுவிட்டுச் சிலவற்றைக் கேட்டேன். புகை வண்டி ஓடக் கிளம்பியவாறு 'கிடு கிடு' என பதிலிறுத்தார்கள்! இத்தனை வயதிலும் எவ்வளவு சுறுசுறுப்பு? அவரைக் காண்பவர்கள் தவஞ் செய்தவர்களன்றால மிகையன்று! அவர் தந்த பதில்கள் இவை:—

வினா:

1. 'அமைதி' வேண்டும், அமைதி வேண்டும் என்று பலரும் இன்று (அரசியல்வாதிகள், சமூகத்தொண்டர்கள், சாதாரண குடும்ப வாழ்க்கையில் உள்ளோர்) பேசிக்கொள்கிறார்கள். அதனைச் சுலபமாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஏதும் வழிவகைகளைச் சுவாமிகள் கூறுவீர்களா ?

விடை:

'அமைதி' என்பது அமைத்துக்கொள்வது அன்று. தானே அமைவதாகும். உறுதி, பெறுதி, தகுதி விடுதி என்பனவும், அமைதியும் தமிழ்ச் சொற்களில் ஒருநிகரன. எல்லாம் தன் வினைகளே. பிறவினையாகா, உறுத்தி, பெறுத்தி, தகுத்தி, விடுத்தி என்பனபோவன தில்லை. அவ்வாறே, அமைதி என்பதுதன் வினையே. அதனால், அமைதி தானாகவே கிடைத்தல் வேண்டும். நாமாக முயன்றால் அம்முயற்சியே அமைதியைக்கெடுப்பதாகும். நாமாகத் தேட முனையும் எம் முயற்சியும் அமைதிக்கு மாறுபட்டதே.

"எத்தனை விதங்கள்தான்
கற்கினுங் கேட்கினும்
என் இதயம் ஒடுங்கவில்லை
... ... ... ... ... ... ... ...
சும்மா யிருந்து அருள்
பொருந்திடாப் பேதைகனே"

என்றார் தாயுமானவர்.

"......சும்மாயிரு சொல்லற என்றலும், அற்ற அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" என்று அருணகிரிநாதர் அருளினார் சும்மா இருத்தல் என்பது சுகமாக இருத்தல் ஆகிய அமைதியைக் குறிப்பது, அமைதி, உடல் செயலின்றி இருப்பதையும், 'நா' பேச்சொழிவதையும குறிப்பதன்று. மனம் அலைவதே அமைதியின்மையாகும். பணம் அலையாதிருந்தாலும் அமைதி உண்டாகாது. அறிவில் உண்டாகும் அமைதியே இயல்பாய நிலையும் பேரின்ப நிலையுமாகும். அறிவு இயல்பான நிலையில் அமைவதே அமைதி எனப்படும். வடமொழியில் 'சாந்தி' என்று புகழ்வதும் இதையேயாகும். "தொட்டால் துன்பம் - விட்டால் இன்பம்" என்பது அமைதிக்குப் பழைமையாகவுள்ள சான்றோர் வாக்கு. இதைப் பெறுவது என்பது வீண் முயற்சியும், பெருந் துன்பம் தருவதும் ஆகும். அதனால் நம் பெரியோர்கள் அமைதிக்கு எது வழியோ அதை வரிசையாகச் சொன்னார்கள்; அவ்வரிசையில் ஒழுகினார்கள் அவ்வொழுக்கத்தினால் அமைதியைப் பெற்றார்கள். அவர்களைத்தான் அமைந்தோர் என்று அனைவரும் போற்றினார்கள். அத்தகைய ஒழுக்க சீலம் வாய்ந்த உத்தமர்கள் பலர் திருவருட் சார்புடன் அமைதியின் இலக்கணமாக இன்றும் வையத்தில் வாழ்'வாங்கு வாழ்ந்து வருவதைக் கண்டும் கேட்டும் இன்புறுகின்றோம். இத்தகையவர்களைத்தான் சமூகம் தம் வழிகாட்டிகளாகக் கொள்ளல் வேண்டும்; அத்தகையவர்களைத்தான் கல்வி, கேள்விகளான் அமைந்தோர் எனப் பரிமேலழகர் முதலிய தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் கூறினார்கள்.

கல்வியாலும் கேள்வியாலும் பல்வேறு வகையான ஒழுக்கங்களாலும் அறிவிலே அமைதியை நிலைபெறச் செய்துகொண்ட புண்ணியர்களை ஆன்று, அவிந்து, அடங்கிய கொள்கைச் சான்றோர் என்று போற்றினர் இதயம் ஒடுங்குவதாகும் அமைதியை அடைகின்ற வழி பின் வருமாறு:—

"அகந்தை அகல வேண்டும் மமதை மாய வேண்டும். ஆசை எல்லாமே மனத்தில் குடிகொண்டிருந்தால் அமைதி எப்படி உண்டாகும்? பற்றற்றவனுக்கு உண்டாகும் அமைதியை, பற்று வடிவாகவே உள்ளவன் எப்படி அடைய முடியும்? ஆகையால், அதற்கு வேண்டும் இரக்கத்தால், சீலத்தால், தவத்தால், விரதங்களால், நல்லோரது இணக்கத்தினால் அமைதி சிறிது சிறிதாக எம் முயற்சியுமே இல்லாது தானேயுண்டாகும்.

"பரபரக்க வேண்டா
பலகாலும் சொன்னேன்
வரவரக்கண்டாராய் மனமே —
ஒருவருக்கும்
தீங்கினை உன்னுதே,
செய்நன்றி கொல்லாதே
ஏங்கி இளையாதிரு"

என்பதைச் சிந்தை செய்தல் வேண்டும்.

வினா:

2. இன்றைய இளைஞர் மத்தியில் சைவ சமய ஆர்வமும எழுச்சியும் ஏற்பட ஏதாவது புதிய முறைகளைக் கையாள வேண்டும் என்று இங்குள்ள சிலர் விரும்புகின்றார்கள். அம்மாதிரியான முயற்சிகள் வரவேற்கத் தக்கவையா? அவை பயன் தருமா என்பதைச் சுவாமிகளிடம் அறிய விரும்புகிறேன்.

விடை:

2. இளைஞர்களிடமோ— பெரியவர்களிடமோ சைவ சமய ஆர்வமும் எழுச்சியும் ஏற்படச் செய்ய வேண்டும் என்னும் விருப்பம் வரவேற்கத்தக்கதே. ஆயின் அதற்காகப் புதியமுறைகள் ஏதும் கையாள வேண்டும் என்ற நவீன யோசனைகளை விடுத்து எங்கள் முன்னோர்கள் ஏத்திப் போற்றிவந்த, பெருமை தரும் திருநெறியாகிய பழமை வாய்ந்த சைவநெறியை ஒவ்வொருவரும் மாயதிந்து, பக்தி வைராக்கியத்துடன் கடைப்பிடித்து ஒழுக முன் வந்தால் அதுவே சைவ எழுச்சியாகும். அந் நெறியில் நிற்போர் பலர் இன்றும் வழி காட்டிகளாக விளங்குகின்றார்களல்லவா ?

(வளரும்)

## பொன்னாலை, ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் தேர்த் திருப்பணி

"ஓர் உருவாயினை! மானாங்காரத்து ஈர் இயல்பாய் ஓர் விண்முதல் பூதலம் ஒன்றிய இரு சுடர் உம்பர்கள் பிறவும் படைத்து அளித்து அழிப்ப மூம் மூர்த்திகள் ஆயினை" என்று ஞானசம்பந்தர் கூறிய வண்ணம் அந்தப் பரம்பொருளே மூவராகவும் உள்ளார்.

ஒருவரேனும் மறு பிறவியை விரும்பமுடியாது பிறப்பறுப்பதே பிறவியின் நோக்கம என்று சமயங்கள் கூறுகின்றன. இறப்பு எவராலும் வெறுக்கப்படுவது. ஆனால் யாவரும் விரும்புவது வாழ்வே! நல்வாழ்வுக்காக காக்கும் கடவுளையே நாம் அணுகவேண்டும் என்பதை உண்மை. முருகனுக்கு முருகாற்றுப்படையும், சிவனுக்கு சிவபுராணமும் பிள்ளையாருக்கு ஒளவையார் அகவலும் எவ்வளவு சிறந்தனவோ, அவ்வண்ணமே ஆண்டாள் திருப்பாவையும் நாராயணனுக்கு உகந்த பாடலாகும்.

திருவெம்பாவையைப் பற்றியே ஒரே அமர்க்களமாக நாடெல்லாம் சிந்தனை செய்யும்போது திருப்பாவையைப்பற்றி அறிந்தவர்களோ மிகவும் குறைந்த எண்ணிக்கையாக இருப்பது இந்நாட்டில் காணலாம்.

மாசங்களில் மார்கழி நான்' என்று கீதையில் கிருஷ்ணன் கூறியபடி மார்கழி முழுவதும் பாடக்கூடிய திருப்பா

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

### அபார நெல் விளைச்சல்!



பக்தர்: "சீனு, பர்மா, சீயம் முதலாம்நாடுகளிலிருந்து இந்துவருடந்தோறும் 3 லட்சம் தொன் அரிசிவரை இறக்குமதி செய்யப்பட்டதாம்! இவ்வாண்டு 2 இலட்சம் தொன் அரிசியைமட்டும் இறக்குமதிசெய்ய உத்தேசமாம்; நம்மவிவசாயிகளுடைய அபார முயற்சியினால் சென்ற ஆண்டு நெல்விளைச்சலில் ஒரு சிறு திருப்பம்உண்டாகியிருக்கு!

சித்தர்: "ஒருசிறியதிருப்பம்என்று இதைக் கருதுகிறீர்களே? நமது விவசாய மன்னர்களுக்குத் தகுந்த உற்சாகமும், உதவியும் வழங்கி, அவர்களுக்கு இருக்கும் தேவைகள், கஷ்டங்களை அநுதாபத்துடன் விசாரித்து அவர்களுடன் கூடியதொடர்பை அரசு வைத்துக்கொண்டால், பழையபடி நாம் எமது தேவை கண்டு பிற நாடுகளுக்கு நெல் ஏற்றுமதி ஏன் செய்யமுடியாது? என்ன?

"நாயன்மார் – நாதன்"

### திருவெம்பாவை பஜனை

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையின் ஆதரவில் சுளிபுரம் கிராம சபையின் தொல்புரம் 2ம் வட்டார உறுப்பினர் திரு. வ. அமிர்தலிங்கம் அவர்களது தலைமையில் ஷீ பசனைச் சபையாரால் திருவெம்பாவை பத்து நாட்களும் பஜனை மிகவும் பக்தச் சிரத்தையுடன் நடைபெற்றது பெருந்தொகையான அடியார்கள் ஷீ பசனைச் சபையாரை வரவேற்றனர்.

## சைவர்கட்கு உணவு......

(2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

செய்பவர்களை ஓர் பிரிவாயும், இரண்டாவது இல்லறம் நடத்துபவர்களை மறு பிரிவாயும், அவர்களின் உணவையும் இரு பிரிவாகப் பிரித்திருக்கின்றார்கள். அது எப்படியெனில் தவசிரேஷ்டர்களுக்கு தாயுமானசுவாமிகள் சொல்லியபடி "கனியேனும் வறிய செங்காயேனும் உதிர்சருகு கந்த மூலங்களேனும் கனல் வாதை வந்தெய்தி அள்ளிப் புசித்து நான் கண்மூடி மௌனியாகி தனிமே இருப்பதற்கெண்ணினேன்" என்றும், இல்லறத்தை நடாத்துபவர்கட்கு தாவர வஸ்துக்களாகிய அரிசி, காய்கறிப் பதார்த்தங்கள், இதைவிட மாமிச போசனத்தை உண்ணும்படி சைவ சமய சாஸ்திரத்தில் சொல்லவில்லை. சாப்பாட்டிற்காக மனிதர் பிறந்தாரல்லர். கடவுளையடைய உடல்தேவை. உடலை வளர்க்க உணவு தேவை. இதுதான் இலட்சியம் இப்படியிருக்க தேகமே நிச்சயமென்று, பிராணிகளின் உயிரை வதைசெய்து ஊனைத் உண்பதுபாவம், அதுவுமல்லாமல் The famous Dr Hyden of England பெரிய மேதாவியாயுள்ள டாக்டர் கைடன் என்பவர் புத்தகத்தில் எழுதியிருக்கின்றார். கடவுள் மானிடர்க்கு சிறு குடல், பெருங்குடல் கொடுத்த நோக்கம் தாவர வஸ்துவினால் ஏற்பட்ட சாப்பாடுகள் ஜீரணிக்கவும், புலி, கரடி, சிங்கம் முதலான மிருகசாதிகட்குச் சிறுகுடல், பெருங்குடல் கொடுத்த நோக்கம் இறைச்சி வகைகள் ஜீரணிக்கவுமாகும்." இவர் தனது அனுபவத்தைக் கொண்டு சொல்லுகின்றார், நாங்களும் அனுபவத்தில் காண்கின்றோம். அநேகமாக இறைச்சி வகை உண்பவர்கட்கு குடலநோய்கள் ஏற்படுவது, அகாலத்தில் பற்கள் விழுவது; ஆயுள் குறைவது, தாவர வஸ்து உண்பவர்கள் அநேகமாய் நோயால் பீடிக்கப்படுவது குறைவு. குடல் நோய்கள், பற்கள் விழுவது குறைவு, அதுவுமல்லாமல் நெடுங்காலம் ஜீவிக்கிறார்கள். Dr Hyden Physiology என்னும் உடலைப் பற்றிச் சொல்லும் அந்தச் சாஸ்திரத்தின்படி சொன்னாலும் சரி அல்லது ஜீவகாருண்யம், அன்பு என்னும் வகைகளாலுஞ் சரி மானிட ஜென்மம் எடுத்த மானிடர்கட்கு உணவு தாவர உணவேயன்றி மாமிச உணவல்ல. அதிலும் சைவர்கட்கு மிக அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தாவர உணவு ஆனதால் விரதங்கட்கு எப்படி மாமிச உணவை விடுத்து தாவர உணவை சுவாமிக்கு நிவேதனஞ் செய்து சாப்பிடுகின்றோமோ, அதே போல் எப்பொழுதும் சாப்பிடவேண்டும். இது வரை தெரிந்தும் தெரியாமலும் செய்த பிழைபோக இனியாவது சைவர்கள் மாமிச போசனத்தைவிட்டு தாவர போசனத்தைச் உண்பார்களாக.

### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ்ஆங்கிலப்பத்திரிகைகளின் சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். — அதிபர்.

## முருகப்பெருமான்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பாடியுள்ளார்.

அடியார்கள் தங்கள் இன்னல்களைப் போக்குவதோடு பலவிதமான வரங்களைக் கொடுத்து தங்கள் உள்ளங்களில் எழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்கள். அத்தோடு பலவிதமாம் கவிதைகளை இயற்றும் சக்தியும் அட்டாவதானமும் சிறந்த இலக்கண இலக்கிய அறிவும் பற்றற்ற நிலையும் மலபரிபாகமும் அடியார் உறவும் பேரின்பமும் அருள வேண்டுமென்கிறார்கள். இவற்றுக்கு மேலாகத் திருவடி தரிசனம் கொடுத்து ஆட்கொள்ள வேண்டுமென்கிறார்கள்.

எவ்வரமும் தந்து புகுந்து உல்லாசமாக உளத்திருந்து பலவிதமாம்.

ஆசுமுதல் நாற்கவியும்
அட்டாவதானமும் சீர்
பேசும் இயல் பல்காப்பியத்
தொகையும் — ஓசை
எழுத்து முதலாம் ஐந்து
இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை
பாலித்து — ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில்
இருவாதனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள்
மோசித்துத் — தன்மைவிடுத்து
ஆயும் பழைய அடியாருடன்
கூட்டித்
தோயும் பரபோகம்
துய்ப்பித்துச் — சேய
அடியேற்கும் பூங்கமலக்கால்
காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று
அருள்.

* இவ்விடத்தில் (முருகன் காட்சியில்) வள்ளி தெய்வயானையை ஏன் குறிப்பிடவில்லை என்பது விளங்கவில்லை. அறிஞர் விளக்கினால் உபகாரமயிருக்கும்.

### பொன்னாலை வரதராஜப் பெருமாள்கோவில் தேர்

[3-ஆம் பக்கத்து வளர்ச்சி]

வையையும் நாம் எல்லோரும் அறியவேண்டியது அவசியம்.

இக்காரணம் கொண்டு திருப்பாவையைப் பாமரமக்களும் அறியக்கூடிய முறையில் அச்சிட்டு விளக்கமும் கொடுத்து அதனால் வரும் ஊதியத்தையும் தேர்த்திருப்பணிக்குக் கொடுப்பதற்கு முன்வந்த தொண்டன் சோழபுரம் சிவசாமியை பொன்னாலை வரதராஜப்பெருமான் கோயில் தேர்த் திருப்பணிச் சபை ஏகாதசியன்று பஜனைக் கோஷ்டியுடன் புத்தகத்தைக் கோயிலுக்கு எடுத்துச் சென்று கௌரவித்ததை ஆண்டவன் செயலாகவினைத்து நன்றி கூறியுள்ளார்.

ஈழத்திலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் இத் திருப்பாவைப் புத்தகத்தை வாங்கிப் படித்துப் பயன் அடைவதுடன் திருப்பணிக்கும் உதவவேண்டும் என வேண்டுகின்றோம்.

—"ஒரு அபிமானி"

## சைவ பரிபாலனசபை வெளியீடுகள்

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திருச்செந்தூர்ப் புராணம் | 10 | 00 |
| தஞ்சைவாணன்கோவை | 6 | 00 |
| திருக்கேதீச்சர புராணம் | 2 | 00 |
| புலியூரந்தாதி | 2 | 00 |
| கிருட்டிணன் தூது (உரையுடன்) | 1 | 75 |
| கந்தபுராணம் - முதல் நூறு செய்யுள் (உரையுடன்) | 1 | 50 |
| திருக்குறள் (1—38 அதிகாரங்கள்) | 1 | 50 |
| ,, (1—20 ,, ) | 1 | 25 |
| கலைமஞ்சரி | 1 | 25 |
| செந்தமிழ்வாசக மஞ்சரி | 1 | 25 |
| நாவலர் சற்குருமணிமாலை | 1 | 00 |
| நாவலர் சமயப்பணி | 1 | 00 |
| ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும் | 1 | 00 |
| சுப்பிரமணிய பாரதியார் (பாடல்களின் தொகுப்பு) | | 85 |
| சைவத் திருநெறித் தோத்திரத்திரட்டு | | 75 |
| நளவெண்பா - கலிநீங்கு காண்டம் | | 75 |
| சைவசமய அறிமுகம் | | 75 |
| திருக்குறள் (25 — 34 அதிகாரங்கள்) | | 75 |
| சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் | | 75 |
| இலக்கிய வாசகம். மூன்றம் புத்தகம் | | 65 |
| சைவபோதம் முதற் புத்தகம் | | 60 |
| ,, இரண்டாம் புத்தகம் | | 60 |
| சிதம்பர மான்மியம் | | 50 |
| வினவெண்பா | | 50 |
| நாவலர் அஞ்சலி | | 50 |
| முருகன் பிள்ளைத்தமிழ் திரட்டு | | 50 |
| சிவபூசைத் திரட்டு | | 50 |
| விநாயகர் | | 40 |
| செந்தமிழ் வாசகமஞ்சரி | 1 | 25 |
| மஹாளய பட்சம் | | 25 |
| நமச்சிவாயமாலை (உரையுடன்) | | 15 |
| நன்னெறி | | 15 |
| வெற்றிவேற்கை | | 10 |
| பால கதா வாசகங்கள் (2, 3, 4ம் வகுப்புகளுக்குரியவை) | | |
| பாலபாடங்கள் | | |

மனேஜர்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

## பன்னிரண்டாந் திருமுறை

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

கைக்கொண்டு உய்க என்று கருணையோடு பெரிய புராணம் என்னும் பொற்றும்பாளத்திலே அறுபான் மும்மை அடியார்களின் அரிய வரலாறுகளை செயற்கரிய செய்த வரலாறுகளை — எம் வைத்துள்ளார். "நெஞ்சங் கனியக் கனியக் கண்ணீர் வாரக்" கவி பாடித் தந்திருக்கின்றார். தெய்வக் மணக்குஞ் செய்யுளிலே தந்திருக்கின்றார். இந்த அடியார்களின் எவர் வாழ்க்கை உங்களுக்கு விருப்பமோ அவர் வாழ்க்கையை ஒல்லும் வகையிற் பின்பற்றியொழுகுங்கள் என்று தந்திருக்கின்றார். இலக்கியச் சுவை நிரம்ப ஒன்பான் சுவையும் பொதுள, அநுபவ உணர்ச்சி மல்கத் தந்திருக்கின்றார். இப் பெரியார்களின் சரிதங்களைச் சொல்லுந் திறன் "சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதால்" என்று சொல்லுகின்றார் உமாபதிசிவம். தேவர் என்பது திருவள்ளுவரின் பெயர்களில் ஒன்று. எல்லாப் பொருளுஞ் சொலவல்ல வள்ளுவர்க்கும் இது சொல்லுதல் அரிது என்ற ஒரு குறிப்பும் இங்குத் தோன்ற நிற்றல் காண்க விரிப்பிற் பெருகும்.

**திருமுறையின் சிறப்புக்கள்:**

இத்துறைகள் பன்னிரண்டும் ஓம் என்னும் பிரவணத்துள் அடங்கி நிற்பன போன்ற சிறப்பை எடுத்துக் காட்டுவர் பெரியோர் முதலாந் திருமுறையில் முதலாந் திருப்பாட்டில் முதலாம் அடியிலவரும் முதலாஞ் சொல் "தோ" என்பதாகும். இதில் முதலாம் எழுத்தாகிய "தோ" என்பதில் உள்ள ஓகாரத்தோடு ஆரம்பிக்கின்றன திருமுறைகள். பின்னர்ப் பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத்தில் கடைசியாகவுள்ள வெள்ளானைச் சருக்கத்தில் கடைசிப் பாட்டிலுள்ள 'உலகெலாம்' என்ற சொல்லின் கடைசித் எழுத்தாகிய 'ம்' என்னும் எழுத்தோடு முடிந்து ஓம் என்னும் பிரணவத்துள் இத்திருமுறைகள் பன்னிரண்டும் அடங்குஞ் சிறப்பைக் காண்க. இத்தகைய பன்னிரு திருமுறைச் செல்வத்தைப்பெற்ற யாம் அதனைப் பொன்னேபோற் போற்ற வேண்டாமா? அத்திருமுறைகளை மெய்யன்போடு படித்தல் வேண்டும். முன்னிலையாகவும் படர்க்கையாகவும் வைத்து இறைவனைத் துதிக்கும் தோத்திரங்கள் இவை. சாத்திரம், சித்தாந்த சாத்திரம் பதினான்குமாகும். தோத்திரமாகிய இவை இலக்கியமாயின், சாத்திரங்கள் இலக்கணமாம். சாத்திரத்தை அறிவதற்கு இத்தோத்திரங்கள் — திருமுறைகள் — பெரிதும் பயன்படுவனவாம். இவை அறிவாற சிவமேயான பெரியோர் அருளிச்செய்த பாடல்களாம். தெருப்பாடல்களுக்கும் இவ்வருட்பாடல்களுக்கும் எத்துணையோ வேற்றுமையுண்டு என்பதை யாம் உணர்தல் வேண்டும். முதன் முதலாகத் தமிழில் எழுந்த இலக்கிய வரலாறு என்று சொல்லத்தக்க திராவிடப் பிரகாசிகை என்னும் நூலிலே சபாபதி நாவலரவர்கள் இலக்கியத்தைக் கால வரிசைக் கிரமத்தின்படி பிரியாது (1) திருமுறை இலக்கியம், (2) சங்க இலக்கியம், (3) காவிய இலக்கியம், (4) புராண இலக்கியம், (5) இதிகாச இலக்கியம், (6) பலவகைப் பிரபந்த இலக்கியம் என்று ஆறு பிரிவுகளாகப் பிரித்தார். அவற்றுள் திருமுறை இலக்கியங்கள் திரோதானம் நீங்கிய அருள் நாத ஒலியும் மற்றைக் கலைப்புலவர் பாடிய பாட்டுக்கள் மாயாநாத ஒலியும் ஆகலின் சிறிதும் தம்முள் ஒவ்வா என்று கூறினர். இயற்கை மாணிக்கமும் செயற்கை செங்கல்லும் தம்முள் ஒவ்வாதது போல என்று உவமையுங் காட்டினர். இந்த அருள் வாக்குகளை ஒல்லும் வகையில் திருவருள் கைகூட்டப் பொருளறிந்துபாடுதல் வேண்டும். பொருளறியாது பாடுவோமாயின் எந்த இடத்தில் எதைப்பாடவேண்டும் என்று அறியாதபடி நகைக்கிடனாகவும் ஆகிவிடலாம். மங்கலவினையொன்று நடைபெறுமிடத்தில், ஒரு திருமணம் நிகழும் இடத்தில், ஒரு தேவாரம் பாடுக என்று பணித்தகால, 'வாழ்வாவாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்று பாடுவோமாயின், அங்குள்ளோர் என்ன செய்வர்? எவ்வாறு கருதுவர்?

(வளரும்)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 9883

காரைநகர் கிழக்கு.

1. V A. முருகேசபிள்ளையும் 2. பெண் ஞானதேவி (தற்பொழுது சூடானிலுள்ள காட்டும்) இவர்களின் நத்துவகாரன் (அற்ரோனி) இராமநாதர் முருகேசு. காரைநகர். — வழக்காளர்கள்

எதிராக

இல: 9, மாவடி ரோட், வண்ணார்பண்ணை மேற்கு. யாழ்ப்பாணம்.
1. மொகமட் அப்துல் காதர் மொகமட் மசூரும்
2. பெண் பஜீர் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9883-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ஆம் ஆண்டு மாசி மாதம் 12-ம் திகதி (12—2—72) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 8605/-ம், 3-4-68 தொடக்கம் 31-10-68 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 448-55

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "இத்தியடி" பர. நில. இல. 1 குளிகள் 3, 3/8 வீடு, வான்பயிர் செய்பயிர்களுட தெற்கெல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு ஐத்துறூஸ் மாக்காம் ரோட், வடக்கு சுல்த்தான் அப்துல்காதர் பெண் அய்ஷா உம்மாவுக்குமுரிய ஆதனம், மேற்கு மீராசாகிப் கைம்பெண் பொன்னாச்சிகும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு மொகைடீன் பெண் கபீப் மொகமட் காச்சியாவுக்குமுரிய ஆதனம்,

பதிவு இல: D 268/221

20, பெருமான் கோவில் வடக்கு ஒழுங்கை. யாழ்ப்பாணம், 4-12-71

நா. ஸ்ரீஇரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம் 366 7-1-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு: இலக்கம், M B 11099

கந்தையா சுப்பையா தெல்லிப்பளை கிழக்கு —வழக்காளி

எதிராக

தியாகராசா சிவ ஐயர் கணேஸ்வரன் சுன்னாகம் —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 11099-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ௵ மாசி ௴ 21-ம் திகதி (21-2-72) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 12240/-ம் 7-9-1969 தொடக்கம் 15-5-70 வரைக்கும் ரூபாய் 8000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 732-34.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இருக்கும் "கதிரவலை தென்மேற்குத் துண்டு" காணி நிலப் பரப்பு 6 உம் பனைகளும், வடகிழக்கில் இருக்கும் கிணற்றில் துரவைப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் வடகெல்லைக காணியால் மேற்குப் பக்கமாகப் போகவர வண்டில் பாதையும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை ஐயாத்துரையின் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு பொன்னம்பலவரேஸ்வரர் கோயிலின் ஆதனம். தெற்கு ஒழுங்கை, இதடங்கலும்.

"வேலபதி"
புத்தூர்.
4-1-72

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 367 7—1—72


வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 7—1—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்